சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 24/2021

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. சுரேஷ் த/பெ. செல்லப்பன் | நாள் 28.10.2025 |
| வயது. 47 | தொழில் |
| கிராமம். சிலாவட்டம் | வட்டம். |

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1) நான் மனுவில் மூனறாம் தரப்பினர் மற்றும் மனுதாரர்கள் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதும் வரவில்லை. இறந்துபோனவரின் மகன் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் பெயர் எனக்கு தெரியாது. இறந்தவர் பெயர் எனக்கு தெரியாது. இடித்த வாகனமும், இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் விவரங்களும் எனக்கு தெரியும். இறந்வர் ஓட்டிச் சென்றதாக கூறும் வாகனத்தின் பதிவு எண். டிஎன் 01 ஏஇசட் 9595 ஆகும். காரின் மத்திய பகுதிதான் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. இறந்துபோனவரின் வயது சுமார் 60 இருக்கும். எனக்கு குறிப்பான வயது பற்றி தெரியாது. அவருக்கு தலையில் பலமான அடி என்றால் சரிதான். அவர் என்ன நிற தலைக்கவசம் அணிந்தார் என்றால் கருப்பு நிற தலைக்கவசம் அணிந்திருந்தார். அடிப்பட்ட நபருக்கு சுயநினைவு இல்லை. தலையில் ரத்தப்போக்கு இருந்தது என்றால் சரிதான். அது எந்த பகுதியில் இருந்தது என்று தெரியவில்லை.

3) தலைக்கவசத்தை யார் அவர் தலையில் இருந்த கழற்றி பார்த்தது என்றால் என்னுடன் இருந்தவர் கழற்றி பார்த்தார், அவர் பெயர் தெரியவில்லை. சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. இறந்தவர் உத்தரமேரூரில் இருந்து புக்கத்துறை வழியாக மாமண்டூரில் உள்ள வங்கிக்கு செல்லும் பொழுது விபத்து ஏற்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சரியாக எங்கு நடந்தது என்றால் மாமண்டூர் பேருந்து நிறுத்ததில் நடைபெற்றது. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்றால் இருசக்கர வாகனத்தின் பின்னால் வந்து இடித்தது. இருசக்கர வாகனம் சாலையைக் கடக்கும் பொழுது கார் இடித்ததா என்றால் இல்லை. மனுதாரர்களுக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சத்தம் கேட்டுதான் நான் பார்த்தேனா என்றால் நான் நேரடியாகப் பார்த்தேன். நான் நேரடியாகப் விபத்தைப் பார்த்திருந்தால் காவல் துறையின் இறுதி அறிக்கையில் என் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் நிலைக்கத் தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.